செய்தி வெளியீடு எண் : 718 நாள் : 16.04.2023

# நெடுஞ்சாலைத்துறை பணிகளின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு

₹சென்னை மற்றும் தாம்பரம் பகுதிகளில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு கட்டுமான பணிகளை அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் இன்று ஆய்வு செய்தார்

முதலாவதாக திருவான்மியூர் முதல் அக்கரை வரை நான்கு வழிச்சாலையாக உள்ள கிழக்கு கடற்கரை சாலையை ஆறு வழிச்சாலையாக அமைக்கும் பொருட்டு ரூபாய். 1111 கோடி மதிப்பில் 10.50 கி மீ நீளத்திற்கு நில எடுப்புடன் கூடிய சாலை அகலப்படுத்தும் பணியை அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் ஆய்வு செய்து நில எடுப்பு மற்றும் கட்டுமான பணிகளை துரிதமாக முடிக்க உத்தரவிட்டார்கள். அதனை தொடர்ந்து, சென்னை சோழிங்கநல்லூரில், ராஜீவ்காந்தி சாலை–கிழக்கு கடற்கரை சாலையை இணைக்கும் சாலையான கலைஞர் கருணாநிதி பிரதான சாலையில் சோழிங்கநல்லூர் ஏரியிலிருந்து பாகிங்ஹம் கால்வாய்க்கு மழை காலங்களில் உபரி நீர் செல்லும் வகையில் நெடுஞ்சாலை துறை சார்பில் ரூ.47 கோடி செலவில் 1.7 கிலோ மீட்டர் தூரத்துக்கு மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியை தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மழைநீர் கால்வாய் பணிக்கு பயன்படுத்தப்படும் சிமெண்ட், கம்பி ஜல்லி, எம்.சாண்ட் மற்றும் தரக்கட்டுப்பாடு குறித்தும் ஆய்வு செய்து பணிகளை துரிதப்படுத்த உத்தரவிட்டார்கள்.

பின்னர், தாம்பரத்தை அடுத்துள்ள பெருங்களத்தூர் பகுதியையும் சேலையூரையும் இணைக்கும் பொருட்டு ஆறு வழித்தடத்தில் தாம்பரம் கிழக்கு புறவழிச்சாலை அமைக்க நெடுஞ்சாலைத்துறையால் **8.0** கி .மீ நீளத்திற்கு திட்டமிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன . இந்த கிழக்கு புறவழிச்சாலையில் ரூபாய் 64 கோடி மதிப்பில் 5.40 கி .மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது மற்றும் ரூபாய் 56 கோடி மதிப்பில் 2.60 கி .மீ நீளத்திற்கு பணிகள் நடை பெறவுள்ளன.

மேலும் இப்பணிக்கான நில எடுப்பு பணிகள் புத்தூர் மற்றும் நெடுங்குன்றம் ஆகிய வருவாய் கிராமங்களில் நடைபெற்றுவருகின்றன. கட்டுமான பணிகளை துரிதமாக முடிக்க அரசு தலைமை செயலர் உத்தரவிட்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக, ரயில்வே கடவு எண் 32 (LC 32) தாம்பரம் மற்றும் வண்டலூர் ரயில் நிலையங்களுக்கு இடையே பெருங்களத்தூரில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி (ROB) ரூ. 234.37 கோடி மதிப்பிலான பணிகளையும் தலைமை செயலாளர் ஆய்வு செய்தார். இப்பாலத்தின் ஒரு பகுதி ஏற்கனவே மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்ட நிலையில் மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்க தலைமை செயலாளர் உத்தரவிட்டார்கள்.

பின்னர் சென்னை குரோம்பேட்டை நகர் பகுதியில் ஜி எஸ் டி சாலையையும் ராதா நகர் பகுதியையும் இணைக்கும் வகையில் ரயில்வே தடத்தை கடக்கும் வகையில் வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதை ரூபாய் 29 கோடி மதிப்பில் நெடுஞ்சாலைத்துறையால் கட்டப்பட்டு வருகிறது. இப்பணியை ஆய்வு செய்த அரசு தலைமை செயலாளர் விரைந்து முடிக்க உத்தரவிட்டார்கள்.

மேலும், போக்குவரத்து மிகுந்த சென்னை மத்திய கைலாஷ் சந்திப்பில் சர்தார் படேல் சாலையையும் ராஜிவ் காந்தி சாலையையும் இணைக்கும் வகையில் நெடுஞ்சாலைத்துறையால் அமைக்கப்பட்டு வரும் ரூபாய் 59 கோடி மதிப்பிலான சாலை மேம்பால பணிகளையும் தகவல் தொழில் நுட்பச் சாலையான ராஜிவ் காந்தி சாலையில் இந்திரா நகர் மற்றும் டைடல் பார்க் சந்திப்பில் ரூபாய் 109 கோடி மதிப்பில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் கட்டப்பட்டு வரும் இரண்டு 'ப' வடிவ சாலை மேம்பாலங்களை அரசு தலைமை செயலர் ஆய்வு செய்து பணிகளை துரிதமாக முடிக்க உத்தரவிட்டார்கள்

இந்த ஆய்வின் போது நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தமிழ் நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மருத்துவர் இரா. செல்வராஜ் இ.ஆ.ப , செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு. ஆ.ர.ராகுல் நாத் இ.ஆ.ப., தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திருமதி. ஆர்.அழகு மீனா இ.ஆ.ப., பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.கருணாநிதி, தலைமை பொறியாளர் திரு. சந்திரசேகரன் மற்றும் திரு சேகர், பொது மேலாளர் திரு ஞானசேகரன், கோட்ட பொறியாளர் ரவி, கோட்டப் பொறியாளர் தட்சிணாமூர்த்தி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர் ஆகியோர் உடனிருந்தனர் .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in